NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu,* p3
**Date:** 15 March 2019

### நீண்டகால வர்த்தக நன்மைகளை அடைவது குறித்து அமைச்சர் சான் சுன் சிங் கருத்து

# வர்த்தக பரிமாற்றத்துக்கு தேவை வலுவான அரசியல் மையம்

நீண்டகால நன்மைகளை உறுதி செய்யும் வகையில் சிரமமான, தைரியமான வர்த்தகப் பரிமாற்றங்களை மேற்கொள்ள நாடுகளுக்கும் அதன் தலைவர்களுக்கும் தேவை ஒரு வலுவான அரசியல் மையம் என்று வர்த்தக தொழில் அமைச்சர் சான் சுன் சிங் தெரிவித்துள்ளார்.

தங்கள் சொந்த வாழ்க்கையில் நிலையான முன்னேற்றங்களை பொதுமக்கள் காணாவிட்டால், தங்களுக்குக் கிடைக்கும் குறுகிய கால நன்மைகளை விடுத்து நீண்ட கால நன்மைகளில் அவர்கள் ஆர்வம் செலுத்தமாட்டார்கள் என்றும் அமைச்சர் விவரித்தார்.

“நாம் நமது பொருளியலையும் அரசியலையும் சரியான திசை நோக்கிச் செலுத்தாவிட்டால், கீழ் நோக்கிச் செல்லும் செங்குத்தான சுழற்சி அபாயத்துக்கு ஆளாவோம்,” என்று திரு சான், லீ குவான் இயூ பொதுக் கொள்கை



வர்த்தக தொழில் அமைச்சர் சான் சுன் சிங்.
**படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

பள்ளியில் நேற்று நடைபெற்ற பிரான்ஸ்–சிங்கப்பூர் பொருளியல் கருத்தரங்கில் எச்சரித்தார்.

“சமமின்மையை நாம் முக்கியமாக சரிசெய்ய வேண்டும். அதே வேளையில் அசைவற்ற பொருளியலின் தன்மையைச் சரி செய்வது அதைவிட முக்கியம். ஆனால் அது அவ்வளவு எளிதான காரியமன்று.

“ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு ஏழையாக இருப்பதற்கும் செல்வந்தர்களாக இருக்கவே முடியாது என்று நம்பிக்கையற்று இருப்பதற்கும் நிறைய வேறுபாடு உண்டு,” என்றும் திரு சான் கூறினார்.

“இந்தப் பிரச்சினையைச் சமாளிக்க, தலைவர்களுக்கு அரசியல் ஆதரவும் தம் மக்களுக்குப் பயிற்சியளிக்கக்கூடிய முதலீட்டு வசதிகளும் இருக்க வேண்டும்.

“அத்துடன் கல்வி முறையை மறுஒருங்கிணைத்தலும் வேகமாக மாறிவரும் பொருளியல் சூழலுக்கு ஈடுகொடுக்க அனைவருக்கும் உதவுதலும் முக்கியம்.

“இவையெல்லாம் நிறைவேற வலுவான அரசியல் மையம் எனும் அடித்தளம் தேவை. அது நாட்டின் நீண்டகால நன்மைகளுக்குப் பாடுபடும் தலைவர்களுக்கும் ஆதரவளிக்கும்,” என்றும் திரு சான் விளக்கமளித்தார்.

பிரஞ்சு பொருளியல் சங்கத்தின் திருவாட்டி கிளேர் வேசண்ட், “பலரையும் உலகப் பொருளியல் சூழ்நிலையின் வேகத்துக்கு ஈடுகொடுக்க உலகமயமாதல் நிறைய உதவியுள்ளது. மேலும் அது உலகம் முழுவதிலும் மக்களை ஏழ்மை நிலையிலிருந்து மீட்டுக் கொண்டு வரும்.

“அதே நேரத்தில், அது நாடுகளிடையே சமமின்மையை அதிகரித்து பதற்றங்களையும் பின்னடைவுகளையும் ஏற்படுத்தும் அபாயமும் உண்டு.

“இது இப்படி இருக்க, உலகமயமாதலில் தொலைந்துபோனவர்களுக்கு இழப்பீடு வழங்குவதும் எளிதானது அல்ல,” என்றும் திருவாட்டி வேசண்ட் சொன்னார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.